<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 58/2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.5<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கருணாநிதிபால முருகன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | வேனு | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 21.09.2022.

<u>**முதல் விசாரணை:**</u>

நான் கல்லாபுரம் பஞ்சாயத்து வேலு நகரில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். 18.09.2018 அன்று காலை 10.00 மணிக்கு நான் வயலுக்கு சென்றபோது அமராவதி போலிசார் அங்கு வந்து மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்கள். அதில் நான் சாட்சியாக கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் **(பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான் அந்த கையெழுத்து மட்டும் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன விவரம் எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆனால் வரைபடம் போட்டதற்கு கையெழுத்து கேட்டார்கள் போட்டேன். மாதிரி வரைபடத்தில் சம்பவ இடம் எங்கு என குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் எலையமுத்தூரில் இருந்து பெருமாள் புதுார் போகும் ரோட்டில் என்று

குறிப்பிட்டுஇருந்தது ஜல்லி எங்கு கொட்டப்பட்டிருந்தது என்றால் தன்னாசியப்பன் கோயில் அருகில் ஜல்லி கோயில் கட்டுவதற்காக கொட்டப்பட்டிருந்தது. இதற்காகத்தான் கையெழுத்து செய்தேன் வேறு எதுவும் தெரியாது. நான் அந்த பகுதியை சேர்ந்தவர் என்பதால் நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.